(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 23 UTM 4A1**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் நேரம் : 3 மணி நேரம்

பகுதி – 3

## கோயிற் கலைகள்

பகுதி – அ (**10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. சங்க காலத்தில் கோட்டங்கள் எதனைக் கொண்டு அமைக்கப்பட்டன?

(அ) மண் (ஆ) மரம் (இ) செங்கல் (ஈ) கருங்கல்

2. மகேந்திரவர்மன் கற்பாறைகளைக் குடைந்து அமைந்த குகைக் கோயில்களில் ஒன்று அமைந்துள்ள ஊர் ………………………..

(அ) திருவாரூர் (ஆ) தஞ்சாவூர் (இ) திருச்சி (ஈ) மண்டகப்பட்டு

3. அருணகிரிநாதர் நாலாயிரம் கண்களால் பார்க்க விரும்பிய முருகன் ………………………

(அ) திருப்பரங்குன்ற முருகன் (ஆ) சுவாமிமலை முருகன்

(இ) திருத்தணி முருகன் (ஈ) செங்கோட்டுநாதன்

4. ஆகமங்களின் தோற்றம் குறித்துக் கூறும் ஆகமம் எது?

(அ)காரணாகமம் (ஆ)வாதுளாகமம் (இ)சுப்ரபேதாகமம் (ஈ) அம்சுமானாகமம்

5. பின்வருவனவற்றுள் கள ஆய்வுக் கருவி எது?

(அ) கடிகாரம் (ஆ) நிழற்படக்கருவி (இ) இருசக்கர வாகனம் (ஈ) தோள் பை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. பள்ளிப்படை என்றால் என்ன?

7. இந்திய நாட்டுக் கட்டடங்களைச் சிற்பக் கலைஞர்கள் எவ்வாறு பிரித்துள்ளனர்?

8. பாண்டிக் கொடுமுடி நாதனை ஞானசம்பந்தர் எங்ஙனம் போற்றியுள்ளார்?

9. சைவ சமயத்துள் முதன்மையான பிரிவு எது?

10. கோயில்கள் குறித்த கள ஆய்வில் தரவுகள் சேகரிக்க அடிப்படையானது எது?

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** (K3)

11. அ. செப்புக் கலையின் பொற்காலம் குறித்துக் கூறுக.

**(அல்லது)**

ஆ. வெட்டுவான் கோயில் குறித்துக் கூறுக.

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

12. அ. தமிழரின் இசைக்கலை குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ. சிற்பம் அமைக்கப் பயன்படும் பொருள்கள் குறித்துக் குறிப்பிடுக.

13. அ. கொங்குநாட்டு முருகன் திருத்தலங்கள் பற்றிக் கூறுக.

**(அல்லது)**

ஆ. கொங்குநாட்டு அம்மன் ஆலயங்கள் பற்றி எழுதுக.

14. அ. சமயங்களின் உட்பிரிவுகள் குறித்து விளக்குக.

**(அல்லது)**

ஆ. திருவிழா என்றால் என்ன? விளக்குக.

15. அ. கோயில்கள் பற்றிய கள ஆய்வில் வினா நிரல் பெறுமிடம் பற்றிக் கருத்துரைக்க

**(அல்லது)**

ஆ. கோயில்கள் பற்றிய ஆய்வில் எவ்வாறு தரவுகளைச் சேகரிக்க வேண்டும் என்பது பற்றி விளக்குக.

**பகுதி – இ** (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.**

(K4 & K5)

16. (அ) சங்க காலக் கலை எனும் பொருளில் கட்டுரை வரைக.

**(அல்லது)**

(ஆ) தமிழ்நாட்டில் கோயில்கள் எடுப்பிக்கப்பெற்ற பின்னணி குறித்து விவரித்து எழுதுக.

17. (அ) ஓவியக்கலை மரபு குறித்து விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) தமிழர் இசைக்கலை பற்றி அறிய உதவும் இசை நூல்கள் பற்றி விவரித்து எழுதுக.

18. (அ) கொங்கு நாட்டுக் கோயில்கள் குறித்து விரித்துரைக்க.

**(அல்லது)**

(ஆ) கொங்கு நாட்டின் சிறப்புப் பெற்ற ஏழு தலங்கள் குறித்துக் கட்டுரைக்க.

19. (அ) சாத்திரங்கள் பற்றி விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) கோயில்களுக்கும் நிகழ்த்து கலைகளுக்கும் இடையேயான உறவைக் குறித்து விவரிக்க.

20. (அ) கோயில் சார்ந்த கள ஆய்வில் தரவுகள் சேகரிப்பு, தகவலாளர் பட்டியல் உருவாக்கம் பற்றி விவரித்துரைக்க.

**(அல்லது)**

(ஆ) கள ஆய்வுக் கருவிகளைச் சுட்டிக்காட்டிக் கள ஆய்வில் அவற்றின் தேவை எவ்வாறு அமைகிறது என்பதை விவரிக்க.